**செய்தி வெளியீடு எண் : 1188** **நாள் : 16.06.2023**

**மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டில் விண்வெளி மற்றும் பாதுகாப்பு வழித்தட முன்னெடுப்பு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் (TIIC) ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு வழித்தடத்தின் கலந்துரையாடல் கூட்டம், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., தொழில் வல்லுநர்கள், பாதுகாப்புத்துறை, AVNL, DRDO, CVRDE, AIDAT, IIT Madras, SIDM ஆகிய துறைகளின் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள் கலந்துகொண்டனர். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் கூட்டத்தில் பங்கு கொண்டோரையும் வரவேற்றார். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் பாதுகாப்புத் துறையில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து சிறப்புரையாற்றினார். மேலும், ஆயுதமேந்திய போர் வாகனங்களின் பராமரிப்பு, பழுது மற்றும் மறுசீரமைப்பில் உள்ள வாய்ப்புகள், L&T கப்பல் கட்டும் தளத்தின் உள்கட்டமைப்பு, BHEL–இன் பயன்படுத்தப்படாத திறன், வெடிமருந்து மையமாக விளங்கவுள்ள சிவகாசி மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார்.

இராணுவ லெப்டினன்ட் ஜெனரல், கே.எஸ். பிரார், "இந்தியாவில் தயாரிப்பு" பற்றிய அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். மேலும், அறிவுசார் சொத்துரிமை மற்றும் வடிவமைப்பின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்புத் துறையில் உள்ள பெருவாரியான வாய்ப்புகள் குறித்தும் அவர் பேசினார். பாதுகாப்புத்துறை அதிகாரிகள், முன்னணி தொழிலதிபர்கள் மற்றும் நிபுணர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்புப் பிரிவில் ஈடுபடச் செய்வது குறித்து பேசினார்கள். பெரும் தொலைவிற்குப் பாயும் ஏவுகணைப் பற்றிய சோதனை வசதிகளை உருவாக்குதல், உள்நாட்டு விமான உற்பத்திக்கான ஊக்குவிப்பு, விண்வெளி தொடர்பான சான்றிதழ் நிறுவனம், அரசின் நிதியுதவி, சோதனை மையங்கள், சிறப்பு மையம், பாதுகாப்பு சம்பந்தப்பட்டதில் கொள்முதல் நடைமுறைகள் ஆகிய அனைத்தும் விவாதிக்கப்பட்டன.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் துறையில் உள்ள தேவை மற்றும் இடைவெளியை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளதாகவும், பாதுகாப்புத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், மாநிலத்தை நோக்கிய தொழில்களின் பங்குக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு முயற்சிகள் எடுக்கும் என்று உறுதி அளித்ததுடன், 2030–ஆம் ஆண்டில் தமிழகத்தை USD 1.00 டிரில்லியன் பொருளாதாரமாக மாற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை அடையும்பொருட்டு தமிழ்நாடு அரசு செயல்படும் என்றும் உறுதியளித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in